### மீனாட்சி அம்மன் குடமுழுக்கு நிகழ்வில்

# அரசியல் தலையீடு உள்ளது!

## அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன் பேட்டி!



மதுரை, செப்.17-

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் குழு தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன் மற்றும் அறங்காவலர் குழுவினர் நேற்று, நிருபர்களிடம் கூறியதாவது:-

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழாவை எந்தவித கருத்து வேறுபாடுகளுக்கும் இடம் கொடுத்து விடாமல் ஒரு மித்த கருத்துடன் அனைவரும் மகிழ்ச்சியாக நடத்திட வேண்டும் என நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், குடமுழுக்கு விழா அழைப்பிதழில் எங்களின் பெயர் புறக்கணிக்கப்பட்டது. நீதிமன்றம் அறிவுறுத்தி அது பேசுபொருளானது. ஆனால் விழா சீரும் சிறப்பாக நடைபெற வேண்டிய இந்நேரத்தில் பக்தர்களின் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவற்றை தாண்டி முறையான வழிகாட்டு நெறிமுறைகள் அனைவரும் தெரிந்து கொள்ளும்படி வெளியிடப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

நன்கொடைதாரர் மற்றும் உபயதாரர்களுக்கு பாஸ் சென்று சேர்ந்துள்ளதா என எங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. கடந்த 1963ல் மறைந்த பி.டி. ராஜன் தலைமையில் இத்திருகோயில் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்று, மீனாட்சி அம்மனுக்கு வைரக்கிரீடம் சாற்றிய குடும்பத்தின் வழிவந்த எங்களின் குடும்பத்தில் என்றைக்குமே அரசியலையும், ஆன்மீகத்தையும் நாங்கள் இணைத்து பார்த்ததில்லை. ஆனால், மீனாட்சி அம்மன் குடமுழுக்கு நிகழ்வில் அரசியல் தலையீடு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

### அரசியல் காழ்ப்புணர்ச்சியால் சோதனை!

# தி.மு.க.வினர் எதற்கும் அஞ்ச மாட்டார்கள்!

## சட்டப்படி எதிர்கொள்வோம் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!



திருச்சி, செப்.17–

திருச்சி தென்னூரில் உள்ள முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இல்லத்தில் நடந்த சோதனை நிறைவடைந்தது.

இதைதொடர்ந்து, தென்னூரில் செய்தியாளர்களுக்கு முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

சந்தேகத்தின் அடிப்படையில் எனது இல்லத்தில் 8 மணி நேரமாக அதிகாரிகள் சோதனையிட்டனர்.

காலை 7 மணியளவில் அதிகாரிகள் இல்லத்தில் நுழைந்ததில் இருந்து முடியும் வரை முழு ஒத்துழைப்பு தரப்பட்டது.

எனது வீட்டில் வைத்திருந்த கல்வித்துறை சார்ந்த ஆவணங்களை மத்திய குற்றப்பிரிவு போலீசார் எடுத்து சென்றனர்.

புதிய தலைமைச் செயலகம், இடைத்தேர்தல் தொடர்பாக பேசியதால் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சோதனை நடத்தப்பட்டுள்ளது.

அரசியல் காழ்ப்புணர்ச்சியால் இதுபோன்ற சோதனைகளை டேக் டைவர்ஷன் த.வெ.க. அரசு மேற்கொண்டுள்ளது.

நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்கள் இல்லை நாங்கள், 75 ஆண்டு கால இயக்கம் தி.மு.க.

மடியில் கனமில்லை, வழியில் பயமில்லை, தி.மு.க.வினர் எதற்கும் அஞ்சமாட்டார்கள்.

எனக்கு தொடர்புடைய இடங்களில் சோதனை செய்த அதிகாரிகள் எனக்கு எதிராக செயல்படுமாறு அன்பாக மிரட்டுகின்றனர். இந்த சோதனை உங்களுக்கு இல்லைங்க, அவரை குறி வைத்து தான், அவருக்கு எதிராக சொல்லுங்க என அன்பாக மிரட்டுகிறார்கள்.

18ம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு அதிகாரிகள் கூறிச்சென்றனர்.

18ம் தேதி காலை 11 மணிக்கு விசாரணைக்கு ஆஜரான பின்னர் நேரடியாக இடைத்தேர்தல் நடக்கும் தாராபுரத்திற்கு செல்வேன்.

மிசா சட்டம், மு.க. ஸ்டாலின் குறித்து சட்ட சபையில் அவதூறாக பேசிய அமைச்சர்கள் மீது வழக்குப்பதிய வேண்டும்.

இவ்வாறு அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறினார்.

### தந்தை பெரியார் 148வது பிறந்தநாள் விழா! அண்ணா அறிவாலயத்தில்

# கழகத் தலைவர் தலைமையில் சமூகநீதி நாள் உறுதிமொழி!

# சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!



சென்னை, செப். 17-

தந்தை பெரியார் 148வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழகத் தலைவர் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் சமூகநீதி நாள் உறுதிமொழியேற்கும் வரலாற்று நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்பீர் என மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற இனத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக மாற்றும் பணியையே முதற்பணியாய் செய்ய தம் வாழ்நாள் இறுதிவரை போராடி, அதில் வெற்றியும் பெற்றவர். தமிழ்நாட்டை உலகில் உள்ள மற்ற நாடுகளுக்கு இனஉரிமைப் போரில் அடையாளம் காட்டியவர். ஜாதிய ஏணிப்படிகட்டு முறையை ஒழிக்கப் போராடியவர். இந்திய அரசியலமைப்பையே முதல் திருத்தம் செய்வதற்கு காரணமாக அமைந்தவர். மூடநம்பிக்கையை ஒழிப்பை முன்னிறுத்தி, ஏன்? எதற்கு? என்று கேள்விக் கேட்கும், அறிவியல் மனப்பான்மையைப் பரப்பியவர். பெண்ணுரிமையைப் போற்றியவர். இப்படிப்பட்ட பெருமைக்கெல்லாம் உரியவர் தந்தை பெரியார் ஒருவர் மட்டுமே என்றால், அதில் மிகையொன்றுமில்லை.

தந்தை பெரியார் அவர்கள் ஏற்றி வைத்த கொள்கை தீபத்தை என்றும் அணையாமல் காத்த பெருமைக்குரியவர். தம் வாழ்நாளில் தம் கண்டதும், கொண்டதும் ஒரே தலைவர் தந்தை பெரியார் என்று முழங்கிய, தந்தை பெரியாரின் மூத்த மாணாக்கர் என்று போற்றப்படும் பேரறிஞர் அண்ணா, ஐந்து முறை தமிழ்நாட்டை ஆண்டு, தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் கொள்கைத் தலைவராக ஏற்றுக்கொண்டு, தமிழ்நாட்டை அனைத்துத்துறைகளையும் செதுக்கி சீர் செய்த தென்னாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் - அவர்களின் அடியொற்றி தமிழ்நாட்டின் போராட்ட வரலாற்றில் இரண்டறக் கலந்து, திராவிட மாடலின் வழிகாட்டியாய் நிறைவேற்றியத் திட்டங்களை உலகமே வியந்துபோற்றுகின்ற திராவிட மாடல் நாயகர், அதே போல் திராவிடத்தை கொள்கை எதிரிகளிடமிருந்து களமாடும், திராவிட இளம் தளபதி உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆண்டுதோறும் திராவிடத்தின் தலைவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடி, இளம் தலைமுறையினருக்கு திராவிடத்தின் வெற்றியை எடுத்துரைத்து வருகின்றனர். அந்த வகையில் இன்று (17-9-2026) தந்தை பெரியார் அவர்களின் 148ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு அண்ணா அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலைகளுக்கு முன்பு காலை 10.30 மணியளவில் சமூக நீதிநாள் உறுதிமொழியேற்கும் வரலாற்று நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர்கள், தோழர்கள், கழக உடன்பிறப்புகள், தொண்டர்கள், அனைத்து அணிகளைச் சேர்ந்தவர்களும் பங்கேற்று சிறப்பித்திட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தலைமை கே.பி.முரளிகிருஷ்ணன் – பிருந்தாஸ்ரீ முரளிகிருஷ்ணன் ! ப. குணாளன் – என். சந்திரன் எம்.சி. – கோல்டு பிரகாஷ் முன்னிலை! காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் தமிழன் தி.மு.காமராஜ் இல்லத் திருமண விழா!

## டி.ஆர். பாலு எம்.பி. – தா.மோ. அன்பரசன்– ஆர்.எஸ்.பாரதி – மா. சுப்பிரமணியன் வாழ்த்துகின்றனர்!



சென்னை, செப். 17

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் - கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வாழ்த்துக்களுடன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் தமிழன் தி.மு.காமராஜ் - ஆலந்தூர் வடக்கு பகுதி 160 வது வட்ட து.செயலாளர் விமலா காமராஜ் ஆகியோரின் மகள் கா.பூவிழி பூஜா - காலடிப்பேட்டை க.பாலாஜி - பா. சரளா ஆகியோரின் மகன் பா.ரூபேஷ் வசந்த் ஆகியோரின் திருமண விழா இன்று (17.09.2026) வியாழக்கிழமை, காலை 7.30 மணியளவில் முதல்வர் திருமண மாளிகை, புதுத்தெரு, ஆலந்தூர். (ஆர்.டி.ஓ அலுவலகம் எதிரில்) 160வது வட்டச் செயலாளர் கே.பி.முரளிகிருஷ்ணன் - மாமன்ற உறுப்பினர் பிருந்தாஸ்ரீ முரளிகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப. குணாளன் - தெற்கு பகுதி செயலாளர் - மண்டல குழு தலைவர் என். சந்திரன் எம்.சி., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு மாலை 6.30 மணியளவில் நடைபெறுகிறது.

மணவிழாவில் டி.எஸ். எம். ஜெயகரன், எம்.ஆர். சீனிவாசன், கே.பாபு குமார், கலாநிதி குணாளன், இரா.கீர்த்திராஜ், இராம.மாதவன், 160வது வட்ட கழக நிர்வாகிகள் எம்.வி.குமார், வி.ராஜா, எச்.சகிம்ஷா, ஏ.ஆர். ஸ்ரீதர், ஆர்.எஸ்.சரவணன், அ.ரூபன் தமிழ்ச் செல்வன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கோ.பிரவீன்குமார், க.இளமாறன், சே.விக்கி, கோ.ராஜ்வேல், என். செந்தில், சீனிவாசன், ஹார்பர் M.குமார், ஆர். எஸ்.விஜய், ஆலந்தூர் எஸ்.ராஜா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இத்திருமண விழாவில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் ஏ. வந்தே மாதரம், கோ. காமராஜ், எம். எஸ். கே.இப்ராஹிம், ஆர்.டி. பூபாலன் சாய் ஜெய்காந்த் பாரதி, இரா. பாஸ்கரன், ஆர். ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், கே. ஆர். ஆனந்தன், வே. டில்லி பாபு, கோ. கோட்டீஸ்வரன், ஐ.அழகேசன், ஜெயா செல்வம், எம். சையத், அபுதாகீர், ஜி.சுந்தர்ராஜன், ஆர்.பாபு, ஏ. சாலமோன், கே.ராஜேஸ்வரி, இ. ரமேஷ், ஜெ. செல்வேந்திரன், டி.ரவி, ம.கோ.கருணாநிதி, ப. கிருஷ்ணமூர்த்தி, ஏ.ஆர். சரவணா, ஏ. வேலவன், டி.ஜேசுதாஸ், கே.ஆர். ஜெகதீஸ்வரன், இ.உலகநாதன். ஜெ.நடராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழாவிற்கு அனைவரையும் ஆலந்தூர் வடக்கு பகுதி அமைப்பு சாரா தொழிலாளர் சங்க துணை அமைப்பாளர் தி.மு.செந்தமிழ்ச்செல்வன் - கல்பனா செந்தமிழ், ர. தமிழ்ச்செல்வன் (குட்டி) - த.செல்வி வரவேற்கின்றனர்.

### கடலூர் மேற்கு மாவட்டம் - நல்லூர் வடக்கு ஒன்றியம்

# பெரியநெசலூர் எஸ்.கார்த்திக் பா.ரம்யா மணவிழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் சி.வி.கணேசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!



கடலூர், செப்.17–

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் பெரிய நெசலூர் சுப்பிரமணியன் பழனியம்மாள் ஆகியோரின் மகன் கிளைக் கழக நிர்வாகி எஸ்.கார்த்திக் கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டம் பரவலூர் பாலு–ராணி ஆகியோரின் மகள் பா.ரம்யாவுக்கும் திருமணம் இன்று (17.09.2026 வியாழக்கிழமை) நல்லூர் ஸ்ரீ சாந்தி மஹாலில் நடைபெறுகிறது.

இத்திருமணத்திற்கு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வி. கணேசன் தலைமை ஏற்று மணமக்களை வாழ்த்துகின்றார்.

மேலும் நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாவாடை கோவிந்தசாமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி. கலைச்செல்வன், மங்களூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.என்.டி.சங்கர், பெரம்பலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், நல்லூர் வடக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் பூலாம்பாடி டி. அண்ணாதுரை, ஏ.அன்புகுமரன், மாரிமுத்தாள் குணசேகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தங்க. நாராயணசாமி, முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் துரை.கருப்புசாமி, மாவட்ட பிரதிநிதி சி. சக்திவிநாயகம், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ஆர்.ரகுநாதன், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் அ.தனசேகரன், கல்வியாளர் பேரவை மாநிலத் துணைத் தலைவர் டி.தண்டபாணி, மற்றும் அணிகளின் நிர்வாகிகள் சோலைராஜன், பி.சசிகுமார், பி.சுப்பிரமணியன், வீரச்ச்செல்வி, பால். கருப்பையா, எம். மண்ணாங்கட்டி, பெ.ஐயப்பன் ஜி. வெங்கடாசலம் எம்.வி.எல். தனசேகர் டி.கண்ணன். அ.பாபு வேப்பூர் வி.குணா ஏ.செந்தில்குமார் கோவி.கதிரவன் அரிஈசன் வி. கணேசன் கே. கதிர்வேல் ஆர். மாரிமுத்து சி. ரஜினிகாந்த் இ.ராஜவேல் இ. துரைமுருகன் எம்.சூர்யா வி. வினோத் சிவக்குமார் அன்புநிதி வி. சாக்ரடீஸ் வி. உதயநிதி பெரியநெசலூர்கிளைக் கழக நிர்வாகிகள் வி.பரமசிவம் பி. கோவிந்தசாமி எஸ்.ராஜங்கம் வி.பி.எஸ். ராஜா கே.பெரியசாமி அண்ணாதுரை எம்.பெரியசாமி ஆர்.சந்திரபாபு சித்ரா சி. செல்வம் சி.சரவணன் எஸ்.பூபதி டி.சங்கர் செந்தில்ராணி சிவக்கொழுந்து ஜெயந்திசங்கர் பி.ரமேஷ் வேல்முருகன் சுதாகர் ஹரிஹரன் விஜயகுமார் சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பெரியநெசலூர் கிளைக் கழக நிர்வாகி ஓ.குமார் காமாட்சி மற்றும் நல்லூர் வடக்கு ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஏ.தங்கபெருமாள் கனிமொழி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

# திருவள்ளூர் முரசொலி முகவர் ஜி.சுரேஷ் (எ)இம்மானுவேல் திருமண வரவேற்பு!

திருவள்ளூர், செப்.17-

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் புங்கத்தூர்கிராம்கோவிந்தசாமி- பொன்னம்மாள் ஆகியோர் மகனும் திருவள்ளூர் முரசொலி முகவர் ஜி.சுரேஷ் (எ) இம்மானுவேல், திருவள்ளூர் மாவட்டம் சேலை கிராமம் சேர்ந்த அன்பழகன் ராணி ஆகியோர் மகள்ஏ. ரம்யா (எ) கெஸியால் ஆகியோருக்கு திருமண வரவேற்பு நிகழ்ச்சி நேற்று (16.09.2026) மாலை 6 மணியளவில் திருவள்ளூர் காமராஜர் சாலையில் அமைந்துள்ள எம்.ஆர்.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இத்திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கவுன்சிலர்கள், பத்திரிகைத் துறையைச் சார்ந்த செய்தியாளர்கள், முகவர்கள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

மணமக்களின் இல்லற வாழ்வு அன்பும், மகிழ்ச்சியும், வளமும் நிறைந்து சிறக்க அனைவரும் வருகை தந்து வாழ்த்தினர்.



புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வம், தட்டாஞ்சாவடியில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி அர்ஜுன் ராமகிருஷ்ணனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். வேட்பு மனு தாக்கலின் போது புதுச்சேரி மாநில தேர்தல் பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா, எதிர்க்கட்சித் தலைவர் நாஜிம், சட்டமன்ற உறுப்பினர்கள் செந்தில்குமார், விக்னேஷ் கண்ணன், விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் லட்சுமணன் எம்.எல்.ஏ., வானூர் தொகுதி எம்.எல்.ஏ., கௌதம் திராவிட மணி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.



காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா பேரவை சார்பில் அறிஞர் அண்ணா அவர்களின் 118 பிறந்த நாளை யொட்டி.அவருடைய திருஉருவச் சிலைக்கு பேரவை சிறப்பு தலைவர் வி எஸ் ராமகிருஷ்ணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நாத்திகம் நாகராஜன், மு. வேதாசலம் குமரேசன் (ex) எம் சி., தலைவர். வழக்கறிஞர் ராஜ்., துணைத் தலைவர் ஆசிரியர் முனுசாமி, செயலாளர் ஜோதி, உதயம் பிரஸ் காந்தி, சிதம்பரநாதன் மற்றும் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.